**Principal District Munsif Court, Sankarankovil.**

தேதி : 23.08.2022
அ.வ.எண். 20/2016
வா.சா.1 காளிமுத்து
<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் நகைக்கடை வைத்துள்ளேன். நான் தபசில் சொத்தின் புல எண். 220/6,4 ஆகிய சொத்துக்களை கணேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு கணேசன் என்பவர் தனது முன் பாஸ்தியர் கருப்பாயி என்பவரிமிருந்து கிரையம் வாங்கின ஆவணத்தை பார்த்துதான் நான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கின காலத்தில் கணேசன் பெயரிலோ கருப்பாயி அம்மாள் பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரிதான். கருப்பாயி மற்றும் கணேசன் என்பவர் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்ததற்கு கிரையம் ஆவணம் தவிர்த்து வேறு ஆவணம் ஏதும் பார்த்தேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கும் காலத்தில் பட்டா எண். 2700 கணபதி பெயரிலும் கசமுத்து என்பவர் பெயரிலும் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு 1934 லிருந்து வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன். அதில் கணேசன் கிரையம் வாங்கின நபர் கருப்பாயி என்பவர் பெயரில் சொத்து பாத்தியப்படட்டது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன் ஆனால் கருப்பாயி பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. கருப்பாயி என்பவர் யாருக்கு வாரிசு என்பதற்கு ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கருப்பாயி யாருடைய வாரிசு என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் இல்லை என்றால் சரிதான். கருப்பாயி என்பவரின் உடன் பிறந்த வார்கள் மற்றும் தாய் தந்தையர் யார் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை.

கணேசன் என்பவர் பூர்வீகம் மற்றும் கருப்பாயி என்பவரின் பூர்வீகத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆதலால் வாரிசு சான்றுதலின்றி கருப்பாயி என்பவர் யாருடைய வாரிசு என்று கூறமுடியாது என்றால் சரிதான். பிரதிவாதி 07.12.2013 ல் கணபதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

கணபதி என்பவரிடமிருந்து பிரதிவாதி 07.12.2013 தேதியில் கிரையம் பெற்ற பின்புதான் நான் **OS No. 191/2014** வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது பெயரில் வழங்கப்பட்ட கூட்டுபட்டா எண் 2700 எந்த வருடத்தில் மனு செய்தேன் என்றால் தெரியாது. எனக்கு ஞாபமில்லை. நான் கிரையம் வாங்கிய நபர் கணேசன் என்பவர் கணபதி என்பவரின் அண்ணன் மகன் ஆவார். கணேசனின் அப்பா பெயர் கசமுத்து. கணபதி மற்றும் கசமுத்துவின் அப்பா பெயர் பாலாறு. பாலாறு உடன் பிறந்தவர் மாடன் மற்றும் அடைக்கலம் ஆவர் என்றால் சரிதான். மேற்சொன்னவர்களின் தாயார் பெயர் மாடத்தி என்றால் சரிதான். மாடத்தியின் சொத்தை மாடத்தியின் வாரிசுகள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. மாடத்தியின் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையை பற்றி எந்தவிவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாடத்தி குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு தான் தெரியும் என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்தில் நடந்த சங்கதிகளை மறுத்து கூறுவதற்கு எனக்கு யாதொரு சங்கதிகளும் எனக்கு தொரியாது என்றால் சரிதான். கூட்டுப்பட்டா 2700 வழங்கப்படுவதற்கு முன்பு பிரதிவாதியோ மற்றும் அவரின் முன்பாஸ்தியஸ்தருக்கு பட்டாவில் கண்ட நபர்களுக்கு அறிவிப்பு எதுவும் வழங்காமலும் எங்கள் இரு தரப்பிலும் நேரில் வைத்து வட்டாட்சியர் விசாரணை செய்து உத்திரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

நான் கிரையம் வாங்கின பிறகு பட்டா மாற்றுவதற்கு எப்போது மனு செய்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. பட்டா மாறுதலுக்கு நான் வாங்கின கிரைய ஆவணம் மற்றும் வில்லங்க சான்றிதழை ஆவணமாக வைத்துதான் மனுசெய்தேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கின பிறகு 2 மாத காலங்களிலே தபசில் சொத்து பிரச்சினை இருந்தது தெரியவந்தது என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து 2015 வது வருடம் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு தான் தபசில் சொத்தில் பிரச்சினை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியவந்தது. நான் தாக்கல் செய்த வழக்கில் கணபதி என்பவர் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் கணபதி ஆஜரான பின்புதான் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்சொன்ன வழக்கு அ.வ.எண். 191/2014 ல் கணபதி என்பவர் தனது எதிர்வழக்குரையில் தற்போது இவ்வழக்கின் பிரதிவாதி நவநிதகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுத்த விவரத்தை கூறியுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.